Registered as a Newspaper

Your Friends in Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

# உதயன்

விலை: ரூ. 1-25

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஞூ ஆனி மீ 15 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1407 ஷவ்வால் பிறை 2 (29 — 06 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 183

‘பருக்கா’ நேற்றுப் புறப்பட்டது

## 3 ஆவது இந்தியக் கப்பல் இன்று காங்கேசனில்

நிவாரணப் பொருள்களுடன் மூன்றுவது இந்தியக் கப்பல் நேற்றுக் காலை எட்டுமணியளவில் சென்னைத் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டது.

இன்று திங்கள் காலை காங்கேசன் துறைமுகத்துக்கு சப்பல் வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கப்பலின் பெயர் ‘பருக்கா’. இது ஒரு சரக்குக் கப்பல்.

கப்பலில் வரும் உணவுப் பொருள்கள் வருமாறு:-

- ★ 250 தொன் அரிசி
- ★ 130 தொன் கோதுமைமா
- ★ 140 தொன் சர்க்கரை
- ★ 40 தொன் பருப்பு – பால்மா
- ★ 1 தொன் புளி
- ★ 1½ தொன் மல்லி
- ★ 15 தொன் சமையல் எண்ணை
- ★ 100 பீப்பாய் மண்எண்ணை
- ★ 20 ஆயிரம் டசின் தீப்பெட்டி.

இந்திய உணவுக் காப்பரேஷன் இணை மேலாளர் திரு. எம். டி. சக்ஸேனாவும் கப்பலில் காங்கேசன்துறை வருகின்

(4ஆம் பக்கம் பார்க்க)

## புதனன்று மாணவர் ஆர்ப்பாட்டப் பேரணி

யாழ்ப்பாணம், ஜூன் 29

கல்வித்துறை மீது மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளை கண்டித்து நாளை மறுதினம் (புதன்கிழமை) ஈழத்தமிழ்மாணவர்கள், ஆசிரியர்கள் பங்குபற்றும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட இருக்கிறது.

அனைத்துக் கல்லூரி மாணவர் முன்னணி என்ற அமைப்பின்பேரில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்தப் பேரணி அன்றைய தினம் காலை 10 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பமாகும்.

பாடசாலைகள் மீது இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும்

(4ஆம் பக்கம் பார்க்க)

‘பருக்கா’ கப்பலுடன்

## இந்தியநிவாரண உதவி நிறுத்தப்பட்டு விடுமாம்

### புதுடில்லியில் ஸ்ரீலங்கா தூதர்

இன்று வரும் ‘பருக்கா–2’ உணவுக் கப்பலுடன் இந்திய நிவாரண உதவிகள் நிறுத்தப்பட்டு விடும்.

புதுடில்லியில் உள்ள ஸ்ரீலங்காத் தூதர் பெர்னாட் திலகரத்தின இப்படித் தெரிவித்தார்.

‘பருக்கா’ உணவுக் கப்பலுக்குப் பிறகு வேறு இந்திய உணவுக் கப்பல்கள் காங்கேசன் துறைக்கு அனுப்பப்படமாட்டா.

—இப்படி திரு. திலகரத்தின தெரிவித்தார் என்று சண்டே ஒப்சேர்வர் செய்தி வெளியிட்டுள்ளது. (உ-எ)

## ஜீ. சி. ஈ. பரீட்சைபற்றி மாணவர் கூட்டம்

### இன்று கைலாசபதி அரங்கில்

யாழ்ப்பாணம், ஜூன் 29

ஈழத் தமிழ் மாணவர்கள் குறிப்பாக —1987ம் ஆண்டு ஆகஸ்டில் ஜீ. சி. ஈ. பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள்–எதிர்நோக்கும் நெருக்கடிகள் குறித்து ஆராய்ந்து நேர்த்தியான முடிவுகளை மேற்கொள்ளுவதற்காக இன்று கலந்துரையாடல் ஒன்று நடைபெறவிருக்கிறது.

இன்று காலை பத்து மணிக்கு யாழ் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி அரங்கில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றும் மேற்படி பரீட்சைக்குத்தோற்றும் சகல பரீட்சார்த்திகளுக்கும் அழைப்புவிடுக்கப்பட்டிருக்கிறது. (உ)

## ஹாபர்வியூவில் படையினர் குவிப்பு

காங்கேசன்துறை, ஜூன் 29

காங்கேசன் துறை ஹாபர்வியூ இராணுவ முகாமில் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் கொண்டு வந்து குவிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

வடமராட்சியிலிருந்தும், பலாலி முகாமிலிருந்தும் வாகனங்களில் ஏற்றிக் கொண்டு வரப்பட்ட இந்த இராணுவத்தினர் தற்போது காங்கேசன்துறை முகாமில் தங்கியுள்ளனர்.

இந்தியா சென்ற சமயம் கடலில் கைதாகி சனியன்று காங்கேசன் துறை முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் இந்த இராணுவ குவிப்பு குறித்து தெரிவித்தனர். (இ-68)

# தமிழர் கஷ்டம் நீங்க காத்திர நடவடிக்கை

## இந்தியா மேற்கொள்ளுப் என்று குப்தா நம்பிக்கை

— அலுவலகச் செய்தியாளர்: எஸ். ஜே. பி. ரட்ணதுரை —

யாழ்ப்பாணம், ஜூன் 29

**தமிழ் மக்களுக்கு இதுவரை ஏற்பட்ட அவலங்களும், கஷ்டங்களும் தொடராமல் அவற்றை நீக்குவதற்கான காத்திரமான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்ளும் என்றே நான் நம்புகின்றேன்.**

**இவ்வாறு யாழ்ப்பாணத்தில் மூன்று நாட்களுக்கு மேல் தங்கி இருந்த கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தின் பாதுகாப்புத்துறை அதிகாரியான கப்டன் குப்தா உதயனுக்குத் தெரிவித்தார்.**

**இந்தியா மேற்கொள்ளும் காத்திரமான நடவடிக்கை ஸ்ரீலங்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான உறவுகளைச் சிதைப்பதாக இருக்க மாட்டாது எனவும் அவர் மேலும் கூறினார்.**

நேற்றுக்காலைகொழும்புத்துறை அகதிகள் முகாமில் உள்ளவர்களுக்கு இந்திய நிவாரண உணவுப் பொருள்கள் வழங்கப்பட்ட நிகழ்ச்சியில் கப்டன் குப்தாவும் கலந்து கொண்டார்.

அந்த நிகழ்ச்சி முடிந்ததும் அவர் காங்கேசன் துறைமுகம் சென்றார். அதற்கு முன்னர் அவருடன் உரையாடிய போதே முன்கண்ட கருத்தை வெளியிட்டார்.

அகதிகள் முகாமில் இருந்தவர்கள் தெரிவித்த சோகச் சம்பவங்களையும், அதனால் ஏற்பட்ட பாதிப்புகளையும் கேட்டு அவர் பெரிதும் மனம் கலங்கியவராகக் காணப்பட்டார்.

தமது உறவினர்களையும், தமது இல்லங்களையும் இழந்திருக்கும் இந்த மக்களின் நிலை மிகவும் வருந்தத்தக்கது. இவர்களுக்கு நடந்தது எவருக்குமே நடக்கக் கூடாது.–

இப்படியானவர்களுக்கு உதவுவதற்காகவே இந்திய அரசு நிவாரணப் பொருள்களை அனுப்பியுள்ளது. —

தமிழ் மக்களுக்கு மேலும் இப்படியான அவ

(4ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



இந்தியக் கப்பல்கள் யாழ்ப்பாணம் வந்து போகுது எண்டு தெரிஞ்சு தான் அமெரிக்கப் போர்க் கப்பல் இந்து சமுத்திரத்துக்கு வருகுதோ....

## அமெ. போர்கப்பல்கள் இந்து சமுத்திரத்தில் நிலைகொள்ளும்!

வாஷிங்டன், ஜூன் 28

அடுத்த மாதக் கடைசியில் இந்து சமுத்திரத்தில் அமெரிக்க யுத்தக் கப்பல்கள் சில நிலைகொள்ளும.

— இப்படி வாஷிங்டன் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

வளைகுடாவுடன் இந்து சமுத்திரப் பிராந்தியத்திலும் அமெரிக்க யுத்தக்கப்பல்களின் பிரசன்னம் இருக்கவேண்டும் என்பதில் அமெரிக்கா அக்கறை செலுத்துவதையே இது காட்டுகின்றது.

நிலைகொள்ள உள்ள யுத்தக்கப்பல்களில் பிரதானமானது ‘மிசூரி’ ஆகும்.

இது தற்போது வளைகுடா அனுப்பப்பட்டுள்ளது. (உ-எ)

இந்தியப் படகுகளை முன்னர்

## திருப்பியனுப்பியவரே மீள வரவேற்றார்!

கொழும்பு, ஜூன் 29

இம்மாதம் 3ஆம் திகதி கச்சதீவில் வைத்து இந்திய உணவுப் படகுகளைத் திருப்பி அனுப்பிய ஸ்ரீலங்காக் கடற்படைக் கப்டன் மோஹன் சமரசேகராவே, கடந்த வியாழன் வந்த இந்திய உணவுக் கப்பல்களுடன் முதலில் வானொலியில் தொடர்பு கொண்டு வரவேற்றார்.

இத் தகவலை கொழும்பில் இருந்து காங்கேசனுக்கு வந்து செய்திகளைச் சேகரித்த வீக்கெண்ட் பத்திரிகையாளர் இக்பால் அத்தாஸ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பிரதிநிதிகளை வரவேற்ற வேட்டுகள்

இராணுவத்தினரின் தாக்குதல்களினால் சேதமடைந்த யாழ் நகரப் பகுதியை பார்வையிடச் சென்ற இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் யாழ் கோட்டை முகாமில் இருந்து தீர்க்கப்பட்ட துப்பாக்கி வேட்டுக்களை அடுத்து இடைவழியில் திரும்பினர்.

நேற்று மாலை ஐந்து மணி அளவில் உள்ளூர் பத்திரிகையாளர்கள் சிலருடன் இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளும், ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளும் யாழ் பஸ் நிலையம், நவீன சந்தைப் பகுதிகளை பார்வையிடச் சென்றனர்.

அவ்வேளை பஸ் நிலையத்துக்கு அண்மையில் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இதனையடுத்து அனைவரும் அவ்விடத்தை விட்டுத் திரும்பி வந்தனர்.

## குப்தாவும் கொழும்பு பயணம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

இந்திய தூதராலய பாதுகாப்பு அதிகாரி கப்டன் குப்தா நேற்று அவசர அவசரமாக கொழும்பு பயணமானார்.

குப்தா கொழும்பு திரும்பியதையடுத்து ஏற்கனவே கொழும்பு சென்ற இந்திய தூதராலய முதலாவது செயலாளர் எஸ். எச். பூரி நாளை மறுதினம் யாழ்ப்பாணம் திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-ள-10)

மண்டைதீவு கடலில் உறவினரை இழந்தவர்கள்

## குப்தா முன் ஒப்பாரி! கலங்கிப் போனார் அவர்!!

யாழ்ப்பாணம், ஜூன் 29

மண்டைதீவுக் கடலில் வைத்துக் கோரமாக வெட்டிக் கொல்லப்பட்ட குருநகர் மீனவர்களுடைய குடும்பத்தினரின் கதறலையும் சோகக் கதைகளையும் நேரில் கேட்ட இந்தியத் தூதராலய பாதுகாப்பு அதிகாரி கப்டன் குப்தா கண்கள் கலங்கிய நிலையில் ஆறுதல்கூற வார்த்தைகளின்றி மலைத்து நின்றார்.

எவர் மனத்தையும் உருக்கும் இந்த சோகக் காட்சி நேற்று, கொழும்புத்துறை புனிதவளனார் குருமட அகதிகள் முகாமில் இடம்பெற்றது.

அங்குள்ள அகதிகளுக்கு உணவுப் பொருள்களை விநியோகிக்கும் வைபவத்தில் கப்டன் குப்தா கலந்துகொண்டார்.

சென்ற வருடம் இதே மாதம் 33 குருநகர் மீனவர்கள் மண்டைதீவுக் கடலில்வைத்து அரச கைக்கூலிகளால் கோரமாக வெட்டிக் குதறிக் கொலைசெய்யப்பட்டனர்.

தமது குடும்பத் தலைவர்களை இழந்த அக் குடும்பத்தினர் தற்போது கோட்டைமுகாம் ஷெல் தாக்குதல்களால் தமது வீடுவாசல்களையும் இழந்து அகதிகளாக முகாமில் தங்கியுள்ளனர்.

கப்டன் குப்தாவைக் கண்ட பாதிக்கப்பட்ட குடும்பப் பெண்கள் தங்கள் சோகக் கதைகளைக்

(4ஆம் பக்கம் பார்க்க)

ஒரு கப்பலை திருமலைக்கு அனுப்புங்கள்

## கிழக்குத் தமிழருக்கும் நிவாரணம் வழங்குக!

### இந்தியாவிடம் தமிழ் அமைப்புக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 29

கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கும் இந்திய அரசாங்கம் நிவாரண உதவிகளை விரைந்து வழங்கவேண்டும்.

யாழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகமும், பிரசைகள் குழுக்களும் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்திடம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளன.

யாழ்ப்பாணத்து மக்களைவிட கிழக்கு மாகாணத்து மக்களே இன்னும் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

உடுக்க உடையின்றி, உண்ண உணவின்றி காடுகளிலும், பாடசாலைகளிலும் ஆயிரக்கணக்

(4ஆம் பக்கம் பார்க்க)

சந்தர்ப்பம் வாய்த்தால் பிரதியுபகாரமாக

# தமிழ்நாட்டில் பட்டினியால் வாடும் மக்களுக்கு நிவாரணம் அனுப்புவோம்

## ஹமீத் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 29

சந்தர்ப்பம் ஏற்படின் பிரதியுபகாரமாக தமிழகத்தில் பட்டினியால் வாடும் மக்களுக்கு நாம் நிவாரணமாக உணவுப் பொருள்கள் வழங்குவோம்.

இப்போது அப்படிச் செய்வது நல்லெண்ணத்தைப் பிரதிபலிக்காது. பதிலுக்குப் பதில் நடவடிக்கையாக அது அமையும்.

— இப்படி வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீத் தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து வெளிவரும் ‘த ஐலண்ட்’ ஞாயிறு இதழுக்கு அளித்த பேட்டியில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

பேட்டியின் [illegible] பகுதிகள் வருமாறு:-

நாட்டில் போதுமான உணவு இருப்பதாகக் கூறிக்கொள்ளும் நீங்கள் நல்ல அயல் நாட்டு உறவைப் பேணவேண்டும் என்பதற்காக இந்திய உணவு உதவியை ஏற்றுள்ளதாகக் கூறுகின்றீர்கள்.

ஆகவே உணவு உதவியை ஏற்க நீங்கள் நிர்ப்பந்திக்கப் படவில்லையா?

அமைச்சர்: ஆரம்பத்தில் இருந்து உணவு உதவி தேவையில்லை என்று நாம் கூறிவருகிறோம். அயல்நாட்டுறவைப் பேணவேண்டும் என்பதற்காகத்தான் அதை இப்போது ஏற்

(4ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

29-06-1987
திங்கட்கிழமை
சுபநேரம்:-
11.56 முதல் 1.26 வரை
ராகுகாலம்:-
7.26 முதல் 8.56 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெளிமாவட்ட ஆசிரியர்கள் இடமாற்றம்

வட்டுக்கோட்டை, ஜூன் 29

வெளி மாவட்டங்களில் 6 வருடங்கள்சேவை செய்த 38 ஆசிரியர்களின் இடமாற்றப் பட்டியல் ஒன்று இம்மாத இறுதியில் யாழ். கல்வித்திணைக் களத்துக்குக் கிடைக்கவிருக்கிறது.

இந்த ஆசிரியர்களுக்கான இடமாற்றக் கடிதங்கள் ஜூலை மாத முற்பகுதியில் யாழ் கல்வித் திணைக்களத்திஞல் அனுப்பி வைக்கப்படவிருக்கிறது.

விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட பாடசாலைகளின் முன்னுரிமைப்படி ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படுவார்கள் என யாழ். கல்விப் பணிப்பாளர் ஜனுப் எம்.எம். மன்சூர் தெரிவித்தார். (இ-161)

# மண்எண்ணெ: வண்டில்மூலம் மீண்டும் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

குடாநாட்டில் மீண்டும் மண்எண்ணெ வண்டில்கள் மூலம் மண்எண்ணெ விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்

— இவ்வாறு வடமாகாணப் பெற்றேலியம் கூட்டுத்தாபன முகாமையாளர்திரு. எஸ் சிவஞானம்கூட்டுத்தாபனத்தின் கீழ்உள்ள விற்பனை முகவர்களைக் கேட்டுள்ளார்.

பொதுமக்கள் அதிகம் உபயோகிக்கும் எரிபொருள்மண்எண்ணெயே

மண்எண்ணெ வண்டில்கள் மீண்டும் இயங்கும் பட்சத்தில் பாவனையாளரும், வண்டில் வியாபாரிகளும் பெரும் பயன் அடைவர்.

மதவாச்சிக்குச் சென்று எரிபொருள் பெற்று வரும் விற்பனை முகவர்கள் தமது விற்பனை நிலையங்களிலுள்ள தாங்கிகளின் ஊடாகவே பாவனையாளர்களுக்கு அவற்றை விநியோகம் செய்ய வேண்டும்.

எரிபொருளை மதவாச்சிக்குச் சென்று பெறுவதற்கு லொறிகளை விடுத்து பவுசர்களை பாவிப்பதே விரும்பத்தக்கது.

தற்போது யாழ்குடாநாட்டில் 12 பவுசர்களே உள்ளன.

— இவ்வாறு வடமாகாணப் பெற்றேலியம் கூட்டுத்தாபன முகாமையாளர் கூறினார். (உ-ள)

### பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன்29

யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் பெற்றேர்தின விழாவும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி அதிபர் திரு. வே. சி. சிவபாலசிங்கம் தலைமையில் நடைபெறுகின்றன.

பிரதம விருந்தினராக யாழ் கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. கே. கந்தசாமியும் சிறப்பு விருந்தினராக நல்லூர் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. சு. சிவவிநாயகமூர்த்தியும் கலந்து கொள்வர். (உ)

### விரிவுரைகள் மீண்டும் ஆரம்பம்

மானிப்பாய், ஜூன் 29

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கல்வித்துறை பட்டப்பின் படிப்புக் கல்வி டிப்ளோமா வகுப்புகளுக்கான விரிவுரைகள் ஜூலை மாதம் 4ஆம் திகதி (சனிக்கிழமை) முதல் மீண்டும் ஆரம்பமாகும் என யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார். (உ-90)

# சேதமடைந்த ஆலயங்கள் பற்றிமதிப்பீடு

வட்டுக்கோட்டை, ஜூன் 29

இலங்கையில் உள்ள சைவ ஆலயங்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்களைத் திரட்டவும் மதிப்பீடு செய்யவும் கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தானத்தைத் தலைமைப் பீடமாகக் கொண்டியங்கும் கீரிமலை சிவநெறிக் கழகம் முடிவு செய்துள்ளது.

வடக்குக், கிழக்கு மாகாணங்களில் இராணுவ நடவடிக்கைகளிஞல் வரலாற்றுப் புகழ்பெற்ற சைவ ஆலயங்கள் பல பாதிக்கப்பட்டிருக்கின்றன.

இராணுவத்தினரால் அழிக்கப்பட்ட சைவ ஆலயங்களின் கட்டடங்கள், சொத்துக்கள் மற்றும் முக்கிய விடயங்கள்பற்றிய தகவல்களைத் திரட்டி மதிப்பீடு செய்வதற்கான துரித நடவடிக்கைகளை கீரிமலை சிவநெறிக் கழகச் செயலாளர் திரு. ச. விநாயகரத்தினம் மேற்கொண்டுள்ளார். (உ-161)

### ஒப்பந்தத்தில் இப்படியும் ஒரு முடிவு!

யாழ்ப்பாணம், ஜூன் 29

இந்திய நிவாரணக் கப்பல்களில் இருந்து இறக்கப்படும் நிவாரணப் பொருள்கள், இறக்கிய கப்பல் புறப்படும் முன் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டும்.

—இவ்வாருன முடிவு இலங்கை — இந்திய அதிகாரிகளுக்கிடையிலான ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாக இந்திய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-ள)

### இதற்கும் கட்டுப்பாடு!

மட்டக்களப்பு, ஜூன்29

அரச — தனியார் ஊழியர்கள் அலுவலக நேரங்களில் அலுவலகத்திற்கு வெளியேநடமாடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென மட்டக்களப்பு இணைப்பதிகாரி திரு. நிமால் சில்வா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

—மேற்படி வேண்டுகோளை மாவட்ட தொழிற் சங்க சம்மேளன பிரதிநிதிகள் சந்திப்பின்போது அவர் வெளியிட்டார்.

# மீட்சிபெற இறைவனை பிரார்த்திப்போம்

## சௌத்திரி கூறுகிறர்

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாண மக்கள் இக்கட்டான இந்நிலையில் இருந்து மீட்சிபெற இறைவனைப் பிரார்த்திப்பதைத்தவிர வேறு வழியில்லை. செஞ்சிலுவைச் சங்கத்தால் செய்யக்கூடியதையே செய்துள்ளோம்.

இவ்வாறு இந்திய செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு. சௌத்திரி கூறினர்.

கொழும்புத்துறை செபமாலை மாதா ஆலய முகாமிலுள்ள அகதிகள் தங்களின் பரிதாப நிலையை அங்கு வந்த சௌத்திரியிடம் எடுத்துரைத்தபோது அவர் இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில், தமிழ்மக்களின் கஷ்டமான நிலையை இந்தியா புரிந்துகொண்டதாலேயே இந்நிவாரண உதவிகளை அனுப்பிவைத்துள்ளது.

சமாதான ரீதியிலான ஒரு சேவைக்கே நாம் இங்கு வந்துள்ளோம் என்ருர். (இ-ள-10)

# வடக்கில் உயர்கல்வி பெரும் பாதிப்பு

அச்சுவேலி, ஜூன் 29

எதிர்காலத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் உயர் வகுப்புக்கள் எதிர்பார்த்தமாதிரி செயற்படமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பல பாடசாலைகளில் உயர் வகுப்புக்கள் மூடப்படலாம்.

உயர் கல்வி கற்கும் மாணவர்கள் எண்ணிக்கை திடீரெனக் குறைந்ததும்; உயர் வகுப்பு மாணவர்களின் கல்விச் சாதனங்கள் இராணுவத்திஞல் சேதப்படுத்தப்பட்டிருப்பதுமே இதற்குக் காரணமாகும்.

யாழ். மாவட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் உயர் வகுப்பு மாணவர்களில் பலர் இராணுவ நடவடிக்கைக்குப்பயந்து வெளி மாவட்டங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் இடம் பெயர்ந்துள்ளனர். பலர் படையினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மற்றெரு பகுதியினர் இராணுவ நடவடிக்கைகளிஞல் உளப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

இராணுவத்திஞல் கைதுசெய்யப்பட்டோரில் பெரும்பாலானவர்கள் மாணவர்களேயாவர். தற்பொழுது நடைபெருமல் ஸ்தம்பிதமடைந்திருக்கும் பாடசாலைகள் செயற்பட ஆரம்பித்ததும் உயர் வகுப்பு மாணவர்கள் பற்றிய உண்மை நிலை தெரியவரும்'— இப்படி கல்லூரி அதிபர் ஒருவர் தெரிவித்தார். (உ-11)

# அச்சுவேலி வெங்காய உற்பத்தியாளர்கள் தரகர்களால் பாதிப்பு

அச்சுவேலி, ஜூன் 29

அச்சுவேலிப்பகுதி விவசாயிகள் தமது விளைபொருள்களை நியாயமான விலைக்கு விற்பனை செய்யவிடாமல் தரகர்கள் குழப்பியடிக்கின்றனராம்.

சூழ் நிலையைப் பயன்படுத்தி வெளியிடங்களில் இருந்து அச்சுவேலிக்கு வெங்காயம் போன்ற விளைபொருள்களைப்பெருமளவில் கொள்வனவு செய்வதற்கு பல வாகனங்கள் வந்து சேருகின்றன.

வெங்காயம் கொள்வனவு செய்யவருபவர்களை அச்சுவேலியில் சந்திக்குச் சந்தி காத்திருக்கும் தரகர்கள் தடுத்து நிறுத்துகின்றனர்.

குறிப்பிட்ட விலைக்குக் கீழ் வெங்காயத்தைவாங்கித் தருவதாகவும் மிகுதிப் பணத்தில் தங்களுக்குக் குறிப்பிட்டளவு தரகுக்கூலி வழங்கப்பட வேண்டும் என்றும் கூறுகின்றனர். பதற்றமான சூழ்நிலை இருப்பதால் விவசாயிகளும் தரகர்களிடமே அவர்கள் கேட்கும் விலைக்கு வெங்காயத்தை விற்கவேண்டிய நிலை உள்ளது. (இ-11)

# பண்டாரி சென்னையில் மூன்று இயக்கங்களின் பிரமுகர்களைச் சந்தித்தார்

கொழும்பு, ஜூன் 29

முன்னுள் வெளியுறவுச் செயலாளரும் இந்திரா காங்கிரஸ் கட்சியின் வெளியுறவுப் பிரிவுத் தலைவருமான ரொமேஷ் பண்டாரி, சென்னை சென்று மூன்று தமிழர் விடுதலை அமைப்புக்களைச் சந்தித்தார்.

இப்படி வெரித்தாஸ் வாஞெலி சனி இரவு அறிவித்தது.

வியாழன் திரு. பண்டாரி சென்னை சென்ருர்.

ஈ. பி. ஆர். எல். எப், புளொட், ஈரோஸ் அமைப்புக்களின் பிரமுகர்களை திரு. பண்டாரி சந்தித்துப் பேசினர்.

இப்படி வெரித்தாஸ் வாஞெலி மேலும் சொன்னது.

இம் மூன்று இயக்கங்களுக்கும் இமயமலைச் சாரலில் பயிற்சி அளிக்கப்பட்டன என்று இன்னெரு செய்தி தெரிவிப்பதாகவும் வெரித்தாஸ் மேலும் அறிவித்தது. (இ-எ)

### சனசமூக நிலைய திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன்29

நாவாந்துறை சென் மேரிஸ் சனசமூக நிலையத்தின் புதிய கட்டடம் யாழ். ஆயர் அதி வண. வ. தியோகுப்பிள்ளை அவர்களிஞல் நாளை செவ்வாய்க்கிழமைமாலை 5 மணிக்கு திறந்து வைக்கப்படும்.

நிலையத் தலைவர் திரு. எம். டானசனின் தலைமையில் பங்குத் தந்தை அருட்திரு. பி. எம். இம்மானுவல் அடிகளின் ஆசீர்வாதத்துடனும் இந் நிகழ்ச்சி நடைபெறும்.

சனசமூக நிலையத்தின் வண. கரேவ் சிறுவர் பூங்காவை யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி.வி. கே. சிவஞானம்—

வண. சார்வே கல்வி நிலையத்தை வண பிதா லூயிஸ் பொன்னையாவும் திறந்து வைப்பார்கள். (உ)

# சபையை உலுக்கிய அபாய மணி

கொழும்பு, ஜூன்29

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றக் கட்டடத்தில்திடீரென்று அபாய மணி ஒலித்தது.

நாடாளுமன்றக் கூட்டம் நண்பகல் இடைவேளைக்காக ஒத்திவைக்கப்பட்ட சமயம் இச்சம்பவம் இடம் பெற்றது.

கீழ் மாடியில் இருந்தவர்கள் அச்சத்தில் வெளியே ஓடினர்.

சிலநிமிடங்களின் பின்னர் இது சம்பந்தமாக குப்பை அள்ளும் இரண்டு தொழிலாளர்களை பொலீஸார் விசாரணை செய்தனர்.

தற்செயலாக இந்த அபாய மணியைத் தாங்கள் இயக்கியதாக அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

அதன் பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். (இ-எ)

# இவர்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லையாம்

காங்கேசன்துறை, ஜூன் 29

தெல்லிப்பளைப் பகுதியில் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிய சில குடும்பங்களுக்கு அரச நிவாரண உதவிகள் கிடைக்கவில்லையாம் என புகார் கூறப்படுகிறது.

தெல்லிப்பளைச் சந்தியைச் சூழவுள்ள பகுதியும், கேணியடி ஒழுங்கைப் பகுதியும் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகியதுடன் அப்பகுதியில் ஹெலி ரோந்தும் அதிகரித்ததால் அங்கிருந்து ஏராளமான குடும்பங்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளன.

இவர்களுக்கு இதுவரை அரச நிவாரண உதவி எதுவும் கிடைக்காமையால் அவர்கள் பெரிதும் கஷ்டமுறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-68)

# தென்மராட்சியில் நிவாரண வேலைகள் துரிதம்

சாவகச்சேரி, ஜூன்29

உடுவில், அச்சுவேலி, பருத்தித்துறை, கோப்பாய், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து சாவகச்சேரி, கொடிகாமம், 'வரணி' மீசாலை ஆகிய இடங்களில் தஞ்சமடைந்துள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க சாவகச்சேரி உதவி அரச அதிபர் பணிமனையில் துரிதமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிவாரணப் பொருள் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டன.

அவற்றை அகதிகள் நிரப்பி பூர்த்தி செய்து உதவி அரச அதிபரின் பெர்மிட்டுப் வழங்கப்பட்டது.

பெர்மிட்டுகளை அவ்வப்பகுதி ப.நோ.கூ.சங்கக் கடைகளில் ஒப்படைத்து நிவாரணம் பெற்றுக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அகதிகளுக்கு உதவி அரச அதிபர் திரு. பு. சுந்தரம்பிள்ளை பணித்துள்ளார். (இ-75)

# உணவுமட்டும் போதாது எம் மீதான தாக்குதல்களை நிறுத்தவும் நடவடிக்கை எடுங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 29

எமக்கு உணவுப் பொருள்கள் தருவதோடு நின்றுவிடாது, எம் மீது அரசு நடத்தும் மூர்க்கத்தனமான தாக்குதல்களையும் நிறுத்த நடவடிக்கை எடுங்கள்.

தமிழ் அகதிப் பெண் ஒருவர் இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளிடம் இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

கொழும்புத்துறை செபமாலைமாதா அகதிமுகாம் அகதிகளுக்கு இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் உணவுப் பொருள்களை வழங்கிய போது முதலாவது நிவாரணத்தைப் பெற்ற அகதிப் பெண் இவ்வாறு கூறினர். (உ-ள)

# அனுராவையும் சிறிமாவையும் அழைத்து ஜே. ஆர். கூறியதென்ன?

கொழும்பு, ஜூன் 29

நிவாரண உதவிகளை வழங்கப்போவதாக இந்தியா அறிவித்ததுடன் திருமதி பண்டாரநாயக்காவையும் என்னையும் ஜனதிபதி அழைத்தார். நாம் அதை ஏற்றுச் சென்றேம். சில தஸ்தாவேஜுக்களைக் காட்டி ஏதோ ஒருவிதமாக ஸ்ரீலங்காவை இந்தியா ஆக்கிரமிக்க இருப்பதாக ஜனதிபதி எம்மிடம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் பேசுகையில்திரு. அனுரா பண்டாரநாயகா இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி இப்படித் தெரிவித்தபின்பே திருமதி பண்டாரநாயக்கா பிரதமர் ராஜீவ் காந்திக்கு தந்தி ஒன்றை அனுப்பினர்.

ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் ஈடுபடவேண்டாம் என்று அத்தந்தி மூலம் பிரதமர் காந்தியை திருமதி பண்டாரநாயக்கா கோரியிருந்தார்.

இதுபற்றி ஜனதிபதி பின்னர் என்ன சொன்ஞர்?

ராஜீவ் காந்திக்கு ஏன் திருமதி பண்டாரநாயக்கா தந்தி அனுப்பவேண்டும்.— இப்படி ஜனதிபதி கேட்டார்.

எதிர்க்கட்சியை அரசு இப்படித்தான் நடத்தி வருகின்றது—

இப்படி திரு. அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார். (இ-எ)

MEDICAL LABORATORY TECHNOLOGIST

Vacancy exists for a full time Medical Laboratory Technologist. Salary not less than Rs. 1000/- per month negotiable Bio Data to:

DIRECTOR
Maternity and Nursing Home,
Market Square,
Chankanai.

(1446)

2ஆம் ஆண்டு
நினைவஞ்சலி



செல்வி சந்திராணி நடராசா
நீர்வேலி.

அன்னையின் மடியில்: 4 – 4 – 1966
ஆண்டவன் அடியில்: 21 – 6 – 1985
சிரார்த்த தினம் : 29 – 6 – 1987

பாசமுள்ள மலரே – எம் சந்திராணி
வாசம் வீசும்வேளை உலகை மறந்தனையோ
நேசமுள்ள உறவுகளை விதி பிரித்ததுவோ
தேற்றுகின்ற நெஞ்சமே எம்மை – மறந்தனையோ
அன்புச் செல்வமே பூத்துக் குலுங்கி
மலராகி மணம்வீசும் வேளையில் சங்கமம்
ஆனயோ நீ எங்களை விட்டுப் பிரிந்து
இரண்டாண்டு ஆனுலும் உன் அன்பும்
அழகும் பொருந்திய இதயத்தை மறக்க
முடியாதம்மா! சாந்தி அடைவாயாக!!

துயருறும்
அப்பா, அம்மா, உறவினர்கள்
(1448)



தமிழாசிரியரும், முன்னுள் ஊர்காவற்றுறைப் பட்டினசபை முதல்வருமான
பருத்தியடைப்பு
உயர்திரு. வல்லிபுரம்
மயில்வாகனம் முத்துலிங்கம்
அவர்களின்
அந்தியேஷ்டி சபிண்டீகரண
நினைவு அஞ்சலி

தாயிலாப்பிள்ளை கட்குத் தாயொடு தந்தையென்ன
மாயிரு ஞாலம் போற்ற மாண்பொடு வளர்த்துமேலாம்
கோயிலாக் கொண்டே யன்பு குறைவிலா தணிசெய்தோயே
நீயிலா எங்கள் வாழ்வு நிறைவுடைத் தாமோஎந்தாய்!

ஊர்காவற் றுறையி லுள்ளோர்க் குத்தம மகனுமென்று
பேராயி ரம்பேர் கூடிப் பட்டினத் தலைவனுக்கிச்
சீராருஞ் செய்கை கண்டு ''சேர்மன்'' என்றழைக்குமுன்றன்
பேராண்மை என்று காண்போம் பெருமிழப் பெமக்கேயன்றே

எடுத்தநற் கரும மொன்றை இடையரு துழன்று செய்வோய்
கொடுத்தநல் வாக்கை யென்றும் குறைபடா நிறைவிற் செய்வோய்
அடுத்தவர்க் குதவி யென்ருல் ஆர்வமோ டடுத்து செய்வோய்
விடுத்தனை யுலகை யென்ருல் விண்ணுளோர் விருந்தானுயோ

அன்னரின் அந்தியேஷ்டி சபிண்டீகரண கிரியைகள் இன்று கரம்பன் இல்லத்தில் நிகழும். உற்ருர், உறவினர், நண்பர்கள் யாவரும் கலந்து நினைவுகூருமாறு அன்புடன் அழைக்கின்ருேம்.

பருத்தியடைப்பு,
ஊர்காவற்றுறை.

— மக்கள், மருமக்கள்
(1450)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

கடவுளிடம் நம்பிக்கையுள்ளவனுக்கு வாழ்க்கை வெற்றிகரமாகவே இருக்கும்.
— சுவாமி சிவானந்தர்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 24805, 22073
29.6.1987
த.பெ.இல: - 23


## புரியும் புருடா!

இந்திய நிவாரண உணவுப் பொருள்கள், பாதிக்கப்பட்ட மக்களுக்கு இப்போது விநியோகிக்கப்படுகின்றன.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் பொருளாதாரத் தடையைத் தொடர்ந்து, பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்ட ஈழத் தமிழர்களுக்கு உதவுவதற்கென இந்திய மத்திய அரசு மட்டுமல்ல, தமிழக அரசு மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள அநேக மாநிலத்தினர் நிதி சேகரித்துள்ளனர். தெற்கு மாநிலங்கள் மட்டும் ஈழத் தமிழர்களின் நிலை குறித்துக் கருணை காட்டினார்கள் என்பதில்லை. வடக்கு மாநிலங்களின் மக்களும் ஈழத் தமிழர்களின் கஷ்டநிலை கேட்டுத் துயர்துடைக்க நிதி உதவி புரிந்துள்ளார்கள்.

ஈழத்தமிழருக்கு நிவாரணம் வழங்கவென இந்தியாவில் சேர்ந்த பணத்தைக் கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறு மாதங்களுக்குத் தேவையான உணவுப்பொருள்களை வழங்க முடியும் எனவும் உத்தேசமாக மதிப்பிடப்படுகிறது.

ஈழத் தமிழர்களுக்கு இந்தியா நிவாரண உணவுப் பொருள் வழங்கப்போவதாக அறிவித்தபோதும், அதற்குப் பின்னரும் ஸ்ரீலங்கா அரசு கூறும் குதர்க்கமான தகவல்களும், பேசும் விதண்டா வாதங்களும் எரிச்சல் ஊட்டுவனவாக உள்ளன.

இவ்வருடம் ஜனவரியில் ஸ்ரீலங்கா அரசு வடபகுதி மீது விதித்த பொருளாதாரத் தடையே, இந்தியா மனிதாபிமான ரீதியாக ஸ்ரீலங்கா விவகாரத்தில் 'தலையிடுவதற்கு' மூலகாரணம். அதனைப் புரிந்து கொள்ளாமலும், தங்கள் தவறை உணர்ந்து கொள்ளாமலும், தடையை நீக்குமாறு இந்தியா பல தடவைகள் கேட்ட போதும் அதற்குச் செவி சாய்க்காமல் திமிருடனும், வீம்புடனும் நடந்து கொண்டதுமே இந்தியாவின் நிவாரண உதவி தேவைப்பட்டதற்குக் காரணங்கள் என்பதை இன்னமும் புரிந்து கொள்ளாத முட்டாள்களாக அரச அதிகாரிகள் அலட்டுகிறார்கள்!

ஐந்து மாதங்களாக வடக்கு மக்கள் உணவுப் பொருள்கள் இன்றி கஷ்டப்பட்ட போது, அதைப்பற்றி அக்கறை காட்டாத ஸ்ரீலங்கா அமைச்சர்களும், அதிகாரிகளும்—

இந்தியாவில் அதுவும் தமிழ்நாட்டில் தான் மக்கள் பட்டினியால் வாடுகிறார்கள் இந்த உணவை அங்கே கொடுங்கள் என்றவாறு கேலி செய்யும் தொனியில் கூறினார்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கு மூன்று மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் கையிருப்பில் உள்ளதாகப் பொய் கூறினார்கள்.

காங்கேசன் களஞ்சியத்தில் இருக்கும் உணவுப் பொருள்களையே எடுக்க முடியவில்லை; கையிருப்பில் உள்ளவையும் அரை மாதத்துக்குக் கூடப்போதாது என்று 'உதயன்' ஆதாரபூர்வமாக செய்தி வெளியிட்டு மறுத்தது.

அவை எல்லாம் போக 'ஐலண்ட் பிறைட்' கப்பல் உணவுப் பொருள்களை இறக்குவதற்காக காங்கேசன்துறை வந்தபோது— திரு. லயனல் பெர்னாண்டோ ரூபவாஹினி ஊதுகுழலுக்கு துறைமுகத்தில் அளித்த பேட்டியில் இம்மாதம் எட்டாம் திகதிக்கும் இருபதாம் திகதிக்கும் இடையில் 287 லொறிகளில் குடாநாட்டுக்கு உணவுப் பொருள்கள் அனுப்பப்பட்டதாகக் கூறினார்.

உலகுக்குக் காட்டுவதற்காக, அல்லது மழுப்பல் நியாயம் கூறுவதற்காக உணவுப் பொருள்களை இந்த மாதத்தில் அரசுஅனுப்பி வைத்த போதிலும்—

அவற்றை இங்குள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவசமாகக் கொடுக்கிறதா? இல்லை, இல்லை! பணத்துக்கு விற்று வியாபாரம் நடத்துகிறது!

அரச படைகளின் அட்டூழியத்தால் உறவினர்களை இழந்த தமிழ் மக்கள் லட்சக்கணக்கானோர், விவசாயம், மீன்பிடி, வர்த்தகம், கைத்தொழில் ஆகிய தொழில்களைப் புரிந்த ஆயிரக்கணக்கானோர் தமது தொழில் வாய்ப்புகளை இழந்திருக்கின்றனர். அதனால் அவர்கள் உழைப்பை நம்பி வாழ்ந்த லட்சக்கணக்கானோர் ஒரு நேர உணவைக் கூட வாங்குவதற்குப் பணமின்றிக் கஷ்டப்படுகிறார்கள்.

உண்மையாகவே தமிழர்களைப் பட்டினியிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்று ஸ்ரீலங்கா அரசு நினைத்திருந்தால், இந்தியா நிவாரணப் பொருள்களை அனுப்பத் தொடங்கியதும், பெயருக்கு உணவுப் பண்டங்களை இங்கு அனுப்பிப் பயனில்லை. அது வெறும் புருடா! உணவுப் பொருள்களை பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவசமாக விநியோகித்திருக்க வேண்டும்.

ஆனால் இந்தியாவே அப்படிச் செய்கிறது! நிவாரணப் பொருள்களைப் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவசமாக விநியோகிக்கிறது!!

எனவே இந்தியா செய்வதுடன் ஒப்பிட்டுப் பேச ஸ்ரீலங்கா அரசுக்கு எவ்வித யோக்கியதையும் இல்லை! அதை அரசு அமைச்சர்களும் அதிகாரிகளும் நன்கு புரிந்து கொள்ளட்டும். அவர்களது புருடா தமிழ் மக்களுக்கு நன்கு புரியும் என்பதையும் தெரிந்து கொள்ளட்டும்!

### முகாபே ரஷ்யாவில்

மாஸ்கோ, ஜூன் 28

சிம்பாப்வே பிரதமர் ருெபர்ட் முகாபே ரஷ்ய விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கின்றார்.

கடந்த வெள்ளிக்கிழமை திரு. முகாபே மாஸ்கோ போய்ச் சேர்ந்தார்.

அணிசேரா இயக்கத்தின் தலைவரான திரு. முகாபே, ரஷ்யத் தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவ்வையும் சந்தித்து முக்கிய பேச்சுக்களை நடத்துவார் என்று அறிவிக்கப்படுகின்றது. (உ-எ)

★ பங்களாதேஷில்

# இந்தியத் தூதரகம் மீது தாக்குதல்

டாக்கா, ஜூன் 28

பங்களாதேஷில் உள்ள இந்தியத் தூதரகம் சனிக்கிழமை பிற்பகல் ஒரு கும்பலால் தாக்கப்பட்டது.

முப்பதுபேர் கொண்ட கும்பல், தூதரக நுழைவாயில் கதவை பலவந்தமாக உடைத்துக் கொண்டு உள்ளே புகுந்தது!

பின்னர் அலுவலக கண்ணாடி யன்னல்கள், தளபாடங்களை அடித்து நொருக்கியது.

காவலில் நின்ற பொலீஸார் வெறுமனே பார்த்துக் கொண்டு நின்றனராம்.

இச்செயல் குறித்து இந்தியா, பங்களாதேஷிடம் வன்மையான கண்டனத்தைத் தெரிவித்து உள்ளது.

இந்தியத் தூதர், மற்றும் ஊழியர்களுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டும் என்றும்—

தாக்குதலில் ஈடுபட்ட கும்பல் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் இந்தியா பங்களாதேஷைக் கோரியுள்ளது.

இதனிடையில் இந்தியத் தூதரகத்துக்கான பாதுகாப்பில் ஈடுபடும் பொலீஸாரின் எண்ணிக்கையை டாக்கா அரசு அதிகரித்துள்ளது. (உ-எ)

## வளைகுடாவில் ரஷ்ய கடற்படையின் பலம் அதிகரிப்பு!

மாஸ்கோ, ஜூன் 28

வளைகுடாவில் ரஷ்யாவும் தனது கடற்படைப் பலத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

பல யுத்தக் கப்பல்களை ஏற்கனவே அப்பகுதிக்கு சோவியத் யூனியன் அனுப்பிவிட்டதாக வளைகுடா வட்டாரங்கள் தெரிவித்தன.

கடற்படைப் பலத்தை அதிகரிக்குமுகமாக அமெரிக்கா, தனது யுத்தக் கப்பல்களை வளைகுடாவுக்கு அனுப்பியுள்ளதைத் தொடர்ந்தே சோவியத்தும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. (உ-எ)

### புதிதாக எண்ணெய்க் கிணறு

சென்னை, ஜூன் 28

காவேரி பள்ளத்தாக்கில் புதிதாக எண்ணெய்க் கிணறு ஒன்று செயல்படத் தொடங்கியுள்ளது.

தினமும் 180 பீப்பாய் எண்ணெய் புதிய கிணறில் இருந்து உற்பத்தி செய்யப்படுகின்றது. இதை விட சுமார் 6 ஆயிரம் கன அடி நிலவாயுவும் எடுக்கப்படுகின்றது.

இப்பகுதியில் இன்னும் 23 எண்ணெய்க் கிணறுகளைத் தோண்டும் வேலை தொடக்குகின்றது.

## அமெரிக்கா மீது சீனவும் பாய்ச்சல்

பீகிங், ஜூன் 27

திபெத்தில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாக அமெரிக்கா கூறியதை சீன கண்டனம் செய்துள்ளது.

இது உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதாக உள்ளது—

—இப்படி சீன கண்டனம் தெரிவித்ததாக சீன செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

திபெத் பற்றி அமெரிக்க நாடாளுமன்றம் அண்மையில் விவாதித்தது.

பின்னர் சீனவை வற்புறுத்தும் விதத்தில் இரு தீர்மானங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன. (உ-எ)

## பறக்கும் தட்டுகள் கிளப்பியுள்ள சர்ச்சை

வாஷிங்டன், ஜூன் 28

அமெரிக்க இராணுவத் தளங்களின் மேல் பறக்கும் தட்டுக்கள் அடிக்கடி பறந்து செல்கின்றன.

இது அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுக்குக் கவலையை ஏற்படுத்தி இருப்பதாக 'பறக்கும் தட்டுக்கள்' பற்றி ஆராய்ச்சி நடத்தும் அமைப்பின் தலைவர் டேல் கோடி தெரிவித்தார்.

செய்தியாளர் மத்தியில் பேசுகையில் அவர் மேலும் சொன்னதாவது;

இது சம்பந்தமான தஸ்தாவேஜுக்கள் பாதுகாப்பு அமைச்சினால் எனக்குத் தரப்பட்டன.

1980 ஆம் ஆண்டு செம்டம்பர் 9ஆம் திகதி நியூ மெக்ஸிகோவில் உள்ள அமெரிக்க விமானத் தளத்தின் மீதாக பறக்கும் தட்டு ஒன்று பறந்து சென்றது. இதனை பாதுகாப்பு அதிகாரிகள் கண்டனர்.

1980 ஆகஸ்ட் 8 ஆம் திகதி ஆயுதக்கிடங்கு ஒன்றின் மேலாகப் பறக்கும் தட்டு ஒன்று சென்றது. மூன்று பாதுகாப்பு அதிகாரிகள் இதனைக் கண்டு மேலதிகாரிகளிடம் முறையிட்டனர்.

-இப்படி அவர் சொன்னார். (உ-எ)

### வெளி உலகில்!

## அமெ. உப ஜனாதிபதியும் சிக்கலில் மாட்டினார்!

வாஷிங்டன், ஜூன் 29

அமெரிக்க உப ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் மீதும் 'ஒழுக்கயீன' குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

குடியரசு வேட்பாளராக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்புப் பெற்றுள்ள திரு. புஷ் மீது, சுமத்தப்பட்டுள்ள இக்குற்றச் சாட்டுக்கள், அவரின் அரசியல் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுமா என்ற நிலையை உருவாக்கியிருக்கிறது.

தனது அலுவலகத்தில் உள்ள பெண் ஊழியர் ஒருவருடன் தொடர்பு கொண்டிருக்கிறார் என்று திரு. புஷ் மீது குற்றம் சுமத்தப்பட்டு உள்ளது.

ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முயற்சித்த திரு. ஹரி ஹார்ட் இப்படியான குற்றச் சாட்டுக்கு இலக்காகியதைத் தொடர்ந்து போட்டியில் இருந்து விலகிக்கொண்டார் என்பது தெரிந்ததே. (உ-எ)

### மோசமடையும் உறவுகள்

அரபு தீவிரவாதிகளுடன் பேச்சுக்களை கிரீஸ் நடத்தி வருவதாக அமெரிக்கா கண்டனம் தெரிவித்ததைத் தொடர்ந்து அமெரிக்க கிரீஸ் உறவு மோசமடையத் தொடங்கியுள்ளது.

# தமிழ் இனத்தை முற்றாக அழிக்க அரசு எடுத்த நடவடிக்கைகள்

> யாழ் வந்துள்ள இந்திய அரசுப் பிரதிநிதிகளிடம் ஈழவர் முன்னணி கையளித்த மகஜரின் இறுதிப் பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

### 1983 இல் இடம் பெற்ற திட்டமிடப்பட்ட இராணுவ அடக்கு முறைகள்:-

ஐந்து விதமாக எம் மீது இராணுவ தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன.

1. திருகோணமலையை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமுகமாக தமிழ் மக்களை வெளியேற்ற இராணுவ ரீதியான பயமுறுத்தலை அரசு மேற்கொண்டது. தமிழர் கைவிட்ட இடங்களில் அரசு சிங்களவர்களைக் குடியமர்த்தியது.

2. வடமுனையில் வாழ்ந்த தமிழர்கள் தாக்கப்பட்டனர். அவர்களின் வீடுகள் எரிக்கப்பட்டன. தமிழர்களைத் துரத்திவிட்டு, ஸ்ரீலங்காச் சிறைகளில் ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த சுமார் ஐந்நூறு குண்டர்களை அந்த இடங்களில் அரசு குடியமர்த்தியது.

3. வடக்கையும் கிழக்கையும் இணைப்பது வவுனியா. ஆயுதப்படையினர் அங்கு வாழும் தமிழரைத் தாக்கினர். கொலை, கொள்ளை சர்வ சாதாரணமாக இடம் பெற்றன. பாதிக்கப்பட்ட தமிழர் அகதிகளாக இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளனர்.

4. இந்தியாவுக்குத் திரும்பிச் செல்லுங்கள் என்று கூறாமல் கூறுவது போன்று மலையகத் தமிழர் நடத்தப்பட்டனர். ஆனால் அவர்கள் இந்தியா செல்லவில்லை. அதற்குப் பதில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அகதிகளாகத் தஞ்சமடைந்தனர். அகதிமுகாம்களில் 25 ஆயிரம் தோட்டத் தொழிலாளர் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர்.

5. கொழும்பில் தொழில் செய்து வந்த தமிழ் முதலாளிகள் பயமுறுத்தப்பட்டனர். அவர்களின் சொத்துக்கள் எரிக்கப்பட்டன. இறுதியில் அவர்களின் உடைமைகளை 'ரேபியா' மூலம் ஸ்ரீலங்கா அரசு எடுத்துக் கொண்டது.

### 1984 இல் நடந்த இராணுவத் தாக்குதல்கள்:

பாதுகாப்பு அமைச்சு அமுலுக்குக் கொண்டு வந்த சண்காணிப்பு வலயத்துடன் இராணுவ நடவடிக்கை ஆரம்பமானது.

இதனால் பருத்தித்துறை, மாதகல், மன்னார் பகுதி மக்கள் பாதிக்கப்பட்டனர். கரையோரப் பகுதி மக்கள் கைது செய்யப்பட்டனர். கொல்லப்பட்டனர், வீடுகள், வள்ளங்கள், வலைகள் எரிக்கப்பட்டன. இதனால் அரை லட்சத்துக்கு அதிகமான மக்கள் அகதிகளாக இந்தியா சென்றனர்.

இராமேஸ்வரம், கோடிக்கரை பகுதிகளில் பல அகதி முகாம்கள் நிறுவப்பட்டன.

### 1985 இராணுவ நடவடிக்கை:

1984 இல் தனது எண்ணத்தை நிறைவேற்ற முடியாத ஸ்ரீலங்கா அரசு புதிய அணுகுமுறை ஒன்றின் மூலம் தனது நோக்கத்தை அடைய முயற்சித்தது.

'யுத்த நிறுத்தம்' என்ற போர்வையில் திருகோணமலையில் பயங்கரக் கொள்கை ஒன்றைக் கடைப்பிடித்தது.

திருமலைப் பட்டினத்தில் உள்ள தமிழர்கள் காரணமின்றி கைது செய்யப்பட்டனர், சுடப்பட்டனர். சுற்றியுள்ள கிராமங்கள் சிங்களக் காடையர்களினால் தாக்கப்பட்டன. தமிழர்கள் துரத்தியடிக்கப்பட்டனர்.

நிலாவெளி, மூதூர், தோப்பூர், தம்பலகமம், சம்பூர், சேனையூர், கட்டைப்பறிச்சான், இலக்கந்தை, அல்லைநகர், நல்லூர், ஆலங்கேணி, ஈச்சந்தீவு, கூனித்தீவு, பாலம்பட்டாறு ஆகிய பகுதிகள் மோசமாகப் பாதிக்கப்பட்டன.

அகதிகளாகச் சென்று முகாம்களில் தங்கியவர்களையும் இராணுவம் விட்டு வைக்கவில்லை.

1985 ஆகஸ்ட் 10ஆம் திகதி திரியாய் அகதி முகாமுக்குள் இராணுவம் நுழைந்து 15 தமிழ் அகதிகளை சுட்டுக் கொன்றது.

திருமலை விமானத் தளத்தை அமெரிக்க போயிங் கம்பெனிக்கு கையளிக்கும் சட்டம் ஒன்றை ஸ்ரீலங்கா அரசு 1985மார்ச்சில் கொண்டு வந்தது. அதே மாதம் புத்தளத்தில் அமெரிக்க வானொலி நிலையம் நிறுவ அத்திவாரம் இடப்பட்டது.

அமெரிக்காவின் கைப்பொம்மையாக ஸ்ரீலங்காவை மாற்றும் இந்த நடவடிக்கைகள் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பதற்றத்தை ஏற்படுத்தின.

### 1986 இராணுவ அடக்குமுறை:-

1985 இல் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடையும் நடவடிக்கையை 1986 இல் ஸ்ரீலங்கா அரசு எடுத்தது.

1. கிழக்கு மாகாணத்தில் இருந்து தமிழ்பேசும் மக்களை வெளியேற்றுவது. அந்த இடங்களில் சிங்கள ஊர்காவல் படையைக் குடியமர்த்துவது.

2. மலையகத்தில் சிங்கள மக்களைக் குடியமர்த்துவது.

மட்டக்களப்பு, படுவான்கரைப் பகுதியில் இருந்து தீவிரவாதிகளை ஒழிக்கும் போர்வையில் கொக்கட்டிச்சோலைக்குள் புகுந்து200க்கு மேற்பட்ட குடிமக்களை இராணுவம் கொன்றது. பலர் கைது செய்யப்பட்டனர். உடைமைகள் நாசம் செய்யப்பட்டன. இதனால் 20 ஆயிரம் தமிழர் அகதிகளாகினர்.

கொக்கட்டிச்சோலை படுகொலையின் பின்னர் கிழக்கு மாகாணத்தில் இருந்து தீவிரவாதத்தை ஒழித்துவிட்டதாக அரசு அறிவித்தது.

### இராணுவ நடவடிக்கை 1987:-

கிழக்கு மாகாணத்தைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தாயிற்று என்ற கற்பனையில் வடக்கு மாகாணத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர 1987 இல் அரசு நடவடிக்கை எடுத்தது. வன்னியில் தனது இராணுவ நடவடிக்கைகளை முடித்துக்கொண்ட அரசு, எல்லா வித முற்றுகைகளையும் யாழ்குடாநாடு மீது விதித்தது.

எரிபொருள், உணவு, தொலைத்தொடர்பு, வைத்திய வசதி ஆகியவற்றின் மீது போடப்பட்ட முற்றுகை யாழ்குடா நாட்டை வெகுவாகப் பாதித்தது.

யாழ் மீதான விமானக்குண்டு வீச்சை அரசு ஆரம்பித்தது. பொம்மர்கள், ஹெலிக்கொப்டர்கள் இவற்றுக்குப் பயன்படுத்தப்பட்டன.

வடமராட்சி, அச்சுவேலி,கீரிமலை, மாவிட்டபுரம் பகுதிகள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

வடமராட்சியில் மட்டும் இருநூறுக்கு அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 15 தொடக்கம் 35 வயது வரையுள்ள 3 ஆயிரத்துக்கு அதிகமானோர் கைது செய்யப்பட்டனர். 20 ஆயிரம் பேருக்கு அதிகமானோர் அகதிகளாகினர்.

இந்த நெருக்கடிக் கட்டத்தில் இந்திய அரசு கவலையும் கண்டனமும் வெளியிட்டது. பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு ஆதரவளிக்கவும் இந்தியா முன்வந்தது. எமது பிரச்சினையை சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு இந்தியா கொண்டு வந்தது.

இந்தியாவின் மனிதாபிமான உதவிக்கு ஸ்ரீலங்கா தமிழ்பேசும் மக்கள் நன்றி தெரிவிக்கிறார்கள்.

எமது விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்கும்படி தமிழ் மக்கள் இந்தியாவைக் கோருகின்றனர். இது தான் தமிழ் மக்கள் வேண்டுவது.

இந்த முக்கிய ஆதரவைத் தான் நாம் கோருகின்றோம்.

எமது கோரிக்கைகள் வருமாறு:—

1. தமிழர் தாயகத்தை அங்கீகரியுங்கள்.

2. இஸ்ரேவல், பாகிஸ்தான், அமெரிக்கா, பிரிட்டன் ஆகியன ஸ்ரீலங்காவின் தமி

(4ஆம் பக்கம் பார்க்க)

### சமய சந்நிதிகளில்

#### மஹோற்சவம்

கொக்குவில், ஜூன் 29

கொக்குவில் - நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதினொரு நாட்கள் தொடர்ந்து நடைபெறும்.

8 ஆம் திகதி புதன் கிழமை சப்பரத் திருவிழாவும், வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும்இடம் பெறும். (உ-69)

★ ★ ★

கொடிகாமம், ஜூன் 29

சாவகச்சேரி வடக்கு மண்டுவில் அம்பாள் கோயில் மகோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

பத்து நாட்கள் உற்சவம் நடைபெறும். இறுதி இரு நாட்களிலும் முறையே தேர், தீர்த்தோற்சவம் ஆகியவை நடைபெறும். (உ-75)

★ ★ ★

வட்டுக்கோட்டை, ஜூன் 29

சித்தன்கேணி சிவகாமி சமேத சிவசிதம்பரேஸ்வரர் கோவில் வருடாந்த திருவிழா சடந்த புதன்கிழமைகொடியேற்றத்துடன்ஆரம்பமானது

எதிர்வரும் 2 ஆம்திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (உ-161)



### பொய்யாமொழி

**குறள்:**

எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்.

**பொருள் :**

கிடைத்தற்கரிய காலம் வந்து வாய்க்குமானல், அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அப்போதே செய்தற்கரிய செயல்களைச் செய்யவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

YOUR FRIENDS IN FINANCE

SHABRA

நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்

SHABRA UNICO FINANCE LTD.

# உதயன்

29 - 06 - 1987 திங்கட்கிழமை

YOUR FRIENDS IN FINANCE

SHABRA

நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்

SHABRA UNICO FINANCE LTD.

## 3ஆவது------

(1ஆம் பக்க தொடர்ச்சி)
ஞர்.

சென்னைத் துறைமுகத்தில் பல பிரமுகர்கள் கப்பலை வழியனுப்பி வைத்தனர்.

இதேவேளை உணவுப் பொருள்களை காங்கேசனில் இறக்கி விட்டு 'ஜலண்ட் பிறைட்' கப்பல் சென்னை புறப்படத் தயாராக இருக்கிறது.


பிரயாண ஒழுங்குகள்

★ குவைத் ★

1. குவைத் நாட்டிற்கு Cleaning Labour ஆகச் செல்ல விரும்புபவர்கள் 01 - 07 - 87 க்கு பின் கீழ்வரும் ஆவணங்களுடன் சமுகம் கொடுக்கவும். வயதெல்லை 19 40

1. PASS PORT
2. PASS PORT PHOTO பிரதி
3. GRAMA SEVAGA சான்றிதழ்
4. PHOTO — 10

KUWAIT

2. Marine Fitters 6 Years Experience

1. In Marine Diesel Engines
2. Compresosors
3. Pumps
4. Winches and Capstans
5. Valves and Actuators
6. Hydraulic Systems
7. Trouble shooting and knowledge of spare parts

Duties 12 hours on. 24hours off.
Shift basics salary K. D. 65 p. m. including food allowances free Accomadation (1 K. D- Rs. 105)

4. MOORING LABOURER: Strong armed experienced men to fasten ships with heavy Mooring rope

முக்கியகுறிப்பு:
★ குடா நாட்டில் வேறு பிரதிநிதிகள் இல்லை. யாபேரும் நேரடியாக தொடர்பு கொள்ளவும்,

தலைமை அலுவலகம்:

Construction & Development Company Ltd.

37, S. DE.S. JEYASINGHE MAWATHA
NUGEGODA.
Labour Licence No. 96

V. P. பாலா
(V. P பாலசுப்பிரமணியம்)
C/o V. பொன்னுத்துரை,
பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். 1444



HORIZON ENTERPRISES

பிரயாண ஒழுங்குகள்

✱ டுபாய் ✱ குவைத் ✱ சவூதிஅரம்கோ கொம்பனி

டிரைவர் விமானநிலையக்கிளீனர் ஹொஸ்பிடல்கிளீனர்
சமையற்காரர் H. V. டிரைவர் தச்சுவேலை
பணிப்பெண்கள் மேசன்

சிங்கப்பூர் பணிப் பெண்கள்

குறைந்த கட்டணத்தில் வயதெல்லை 17 - 35

மற்றும் அனைத்து மத்தியகிழக்கு நாடுகளுக்கான வெற்றிடங்கள் மிக அதிகளவில் எம்மிடம் இருப்பதால் தாமதமின்றி தொடர்பு கொள்ளவும். தற்போதைய நாட்டு நிலைமை காரணமாக எம்முடன் தொடர்பு கொண்டு நாம் முதல் தடவையில் அவர்களை கொழும்பு அழைத்துச் சென்று மீண்டும் யாழ் திரும்பாது எமது பாதுகாப்புடன் சகல வசதிகளும் நிறைந்த எங்கள் சொந்த வதிவிடத்தில் வைத்து மிகத் துரிதகதியில் பயணம் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்து தரப்படும் என்பதையும் உண்மையுடன் தெரிவித்துக் கொள்கிறோம் எந்தக் காரணம் கொண்டும் முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது. எமது முகவர் நிலையத்தினுல் பயணம் மேற்கொள்வோர் பெயர் விபரம் அடுத்த வாரம் வெளியிடப் படும். மற்றும் எம்மிடம் எல்லா நாட்டிற்கான சகலவிதமான முத்திரைகளும் மலிவு விலையில் கிடைக்கும். உங்கள் கடவுச்சீட்டுக்கள் [ PASS PORT ] குறித்த தவணையில் குறைந்த செலவில் செய்து தரப்படும்.

★ மாலைதீவு செல்ல விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்: வயதெல்லை 17 — 35. மிகக்குறைந்த கட்டணத்தில் துரிதகதியில் செய்து தரப்படும்.

A. பத்மதாஸ்
இல, 97/1, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

HORIZON ENTERPRISES
No. 87, 2/1, 2nd Floor,
Kollupitiya Lane,
COLOMBO - 3.
Telephone: 574000


# பூஸா சித்திரவதை பற்றி மன்னிப்புச் சபை கவலை

லண்டன், ஜூன் 28

பூஸா இராணுவ முகாமில் வைக்கப்பட்டுள்ள தமிழர்கள் சித்திரவதை, துன்புறுத்தல்களுக்கு உள்ளாவது குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை கவலை தெரிவித்துள்ளது.

பூஸா இராணுவ முகாமில் இடம்பெறும் சித்திரவதை மற்றும் துன்புறுத்தல்கள் பற்றி சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்ட ஆறு பக்க அறிக்கையில் இக்கவலை வெளியிடப்பட்டுள்ளது.

காலிக்கு அருகில் உள்ள பூஸா இராணுவ முகாமில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் விசாரணையின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சித்திரவதை, துன்புறுத்தல்களுக்கு இவர்கள் ஆளாகுவதாக முறைப்பாடுகள் வந்து உள்ளன.

அவர்களுக்கு போதிய உணவு, வைத்திய வசதிகள் வழங்கப்படுவதில்லை என்றும் தெரிய வந்துள்ளது.

முகாமில் உள்ள தமிழர் சித்திரவதைக்கு இலக்காவதை ஸ்ரீலங்கா அரசின் அதிகாரிகள் தடுத்து நிறுத்த வேண்டும்.

ஐ. நா. வகுத்துள்ள– குற்றம் புரிந்தவர்களை பராமரிக்கும் – விதிகளில் கூறப்பட்டுள்ளபடி, சுத்தமான தண்ணீர், போதுமான உணவு, வைத்திய வசதிகள் பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

– இப்படி சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் கூறியுள்ளது. (உ–எ)

## உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

விடுதலைப் புலிகளை இந்தியா அங்கீகரிக்க வேண்டும் எனக் கோரி சனிக்கிழமையன்று பரந்தன், ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு ஆகிய பகுதிகளில் ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

இதேவேளை வெள்ளிக்கிழமை குளவிசுட்டான், வேலங்குளம் பகுதிகளிலும் ஐநூறுக்கும் அதிகமான மக்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

# தமிழ்நாட்டில் பட்டினியால்-------

(1ஆம் பக்க தொடர்ச்சி)
ரேும்.

உணவு உதவி எம்மீது திணிக்கப்பட்டுள்ளது என்று நீங்கள் கூறுகின்றீர்கள்.

ஆனுல் நாம் இந்த நிலைப்பாட்டை எடுத்ததற்கான காரணங்கள் குறித்து சர்வதேச சமூகம் பெரிதும் உணர்ந்துள்ளது என்று நான் நினைக்கின்றேன்.

உணவு உதவியை நாம் ஏற்றுக்கொண்டாலும் பழைய நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை.

உணவு உதவி எம்மீது திணிக்கப்பட்டதாக நான் எண்ணவில்லை.

உதவியை ஏற்கமாட்டோம் என்று நாம் கூறி இருப்பின் இன்னெரு நெருக்கடி ஏற்பட்டிருக்கும். வேண்டாம் என்று சொல்லியிருந்தால் இந்தியா எம்மீது உதவியை நிர்ப்பந்தித்திருக்காது.

கேள்வி: இந்தியா தந்த உதவியைப் போன்று தமிழகத்தில் பட்டினியால் வாடும் மக்களுக்கு உதவ ஸ்ரீலங்கா அரசும் உணவுப்பொருள்களை அனுப்பலாமே!

அமைச்சர்: சந்தர்ப்பம் எழுந்தால் அப்படிச் செய்யலாம். முன்னர் ஒருமுறை சந்தர்ப்பம் ஏற்பட்டது. நாம் விரைந்து உதவினேும். அப்போது திருமதி இந்திரா காந்தி அதற்காக நன்றி தெரிவித்தார். சந்தர்ப்பம் எழுந்தால் (அப்படி எழாது என்று நம்புகின்றேன்) நாம் பதிலுக்கு உதவுவோம்.

கேள்வி: இன்று தமிழ்நாட்டில் பட்டினி நிலவுகின்றது. நல்ல அயல்நாட்டுறவைப் பேணுமுகமாக இப்போது நீங்கள் பிரதியுபகாரமாக உதவலாமே!

அமைச்சர்: உடனடியாக நாம் இதைச் செய்தால் அது நல்லெண்ணத்தைப் பிரதிபலிக்காது, பதிலுக்குப்பதில் செய்ததாக அது இருக்கும்.

பொறுப்புணர்ச்சி, கௌரவம் ஆகியவற்றுடன்தான் ஸ்ரீ லங்கா செயலாற்றிவருகின்றது. மலிவு விளம்பர நடவடிக்கைகளில் நாம் ஈடுபடக்கூடாது. வேதனை, வெறுப்புக்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது, சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளக் கூடிய வேறு வழிகள் உண்டு.

கேள்வி: வடபகுதியில் போதுமான உணவு இருப்பதாக நீங்கள்வலியுறுத்தியும் இந்தியாஏன் நிவாரண உதவி அனுப்ப வேண்டும் என்று விடாப்பிடியாக நிற்கின்றது?

அமைச்சர்: திரு. காந்திக்கு நான் இதைத் தெரிவித்தேன். வடபகுதியில் நான்குமாதங்களுக்குத் தேவையான உணவு இருப்பதாகக் கூறினேன். வடபகுதியில் உணவுத் தட்டுப்பாடு இருப்பதாக சர்வதேச சமூகத்தில் ஓர் உணர்வை ஏற்படுத்தி மனிதாபிமான உதவியைப்பெற தீவிரவாதிகள் எடுத்த பிரசாரத்தினுல்தான் இந்தப் பிரச்சினை ஏற்பட்டது.

கேள்வி: அப்படியானுல் தீவிரவாதிகள் கூறியதைத்தான் இந்தியா ஏற்றுக்கொண்டதா?

அமைச்சர்: இந்திய அரசுக்கு தவருன தகவல்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. உணவுவிஷயத்தில் மட்டும் அல்ல வேறு பல விஷயங்களிலும் தவருன தகவல்களே இந்தியாவுக்குக் கொடுக்கப்படுகின்றன என்றுஎண்ணுகின்றேன்.

கேள்வி: உங்களுடைய விளக்கத்தின் பின்னரும் இந்தியா உணவு அனுப்பியுள்ளதே.

அமைச்சர்: நான் புதுடில்லி போகும் முன்னர் அதுபற்றி உடன்பாடு ஏற்பட்டுவிட்டது.

கேள்வி: அதுசரி. அப்படி என்றுல் ஏன் இன்னும் கூடுதலாக உணவு அனுப்பவேண்டும் என்று இந்தியா கூறுகின்றது?

அமைச்சர்: எவ்வளவு உணவு அவர்கள் அனுப்பவேண்டும் என்பது பற்றி நாம் பேச்சுக்கள் நடத்தி வருகின்றேும். இதில் ஒரு வேறுபாடு உண்டு. அவர்களின் உணவுப் பொருள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது. நாம் கொடுப்பது என்றுல் அதற்கு மக்கள் பணம் கொடுக்கவேண்டும்.

கேள்வி: இந்திய மத்தியஸ்தத்தில் முன்னேற்றம்காணப்பட்டுள்ளதா?

அமைச்சர்: இராஜதந்திர நடவடிக்கைகள் நிறைய இடம்பெற்று வருகின்றன. ஆக்கபூர்வமான எதுவும் உருவாகவில்லை.

கேள்வி: பேச்சுக்கள் நடத்த தயாராகும்படி தமிழர் குழுக்களுக்கு இந்தியா கூறியுள்ளதா?

அமைச்சர்: அப்படித்தான் நான் நம்புகின்றேன்.

கேள்வி: பேச்சுக்கள் நடத்த தமிழர் குழுக்கள் ஒப்புக்கொண்டுள்ளனவா?

அமைச்சர்: இந்தக் கட்டத்தில் நான் ஒன்றும் சொல்லமாட்டேன். பொறுத்து இருந்து பார்ப்போம். (உ–எ)

# அகதிகள் விவரம்

## இணைப்புக் குழு 'திர' டுகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 29

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள சகல கிராமசேவகர் பிரிவுகளுக்குமுரிய பிரசைகள் குழுக்கள், தத்தமது பகுதிகளிலுள்ள அகதிகள் பற்றிய விவரங்களை உடன் அனுப்பி வைக்குமாறு பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழு கேட்டுள்ளது.

அகதி முகாம்கள், அங்குள்ள அகதிக் குடும்பங்கள், அவற்றின் உறுப்பினர்கள் ஆகியவை பற்றிய மொத்த எண்ணிக்கையை உடன் அனுப்பி வைக்குமாறு இணைப்புக் குழு அமைப்பாளர் நாயகம் திரு. எஸ். சிவானந்தராசா கோரிக்கை விடுத்திருக்கிறுர்.

பிரசைகள் குழுக்கள் இல்லாத கிராமங்களில் உள்ள அகதிகள், அருகிலுள்ள கிராமசேவகர் பிரிவிலுள்ள பிரசைகள் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் தெரிவித்தார். (உ–எ)

## வானூர்தி ரோந்து குறைவு

யாழ்ப்பாணம், ஜூன் 29

வடக்கில் இராணுவ வானூர்திகளின் ரோந்துச் சேவைகள் கடந்த சில தினங்களாக மிக மிகக் குறைந்துள்ளன.

இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளும் இந்திய அதிகாரிகளும் யாழ் நகரில் தங்கி நிற்பதே இதற்குக் காரணம் எனச் சொல்லப்படுகிறது. (உ-10)

## தமிழ் இனத்..

(3 ம் பக்கத் தொடர்ச்சி)
மூர் மீதான அடக்கு முறைகளில் ஈடுபடுவதை கண்டியுங்கள்.

3. சர்வதேச கூலிப் படைகளின் ஆதரவுடன் எமது தாயகத்தை ஸ்ரீலங்கா அரசுப் படைகள் ஆக்கிரமித்துள்ளதைக் கண்டியுங்கள்.

4. விடுதலை அமைப்புக்களை சமூக பாதுகாப்புச் சக்திகளாக அங்கீகரியுங்கள்.

—இவற்றையே இந்தியாவிடம் நாம் கோருகின்றேும். (உ–எ)

(முற்றும்)

## புதனன்று------

(1ஆம் பக்க தொடர்ச்சி)
மேலாதிக்கத்தைக் சண்டித்தும்—

இதுவரைக் கைது செய்யப்பட்ட ஈழத் தமிழ் மாணவர்களை உடனடியாக விடுதலை செய்யக் கோரியுமே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்படுகிறது. (உ)

## குப்தா--- -

(1ஆம் பக்க தொடர்ச்சி)
கூறி ஒப்பாரி வைத்து அழுதனர்.

அவர்களின் பரிதாப நிலையைப் பார்த்து கப்டன் குப்தா ஆறுதல் கூற வார்த்தைகள் இன்றி கலங்கிநின்ருர்.

கூடநின்ற இந்திய, இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் அகதிகளுக்கு ஆறுதல் கூறினர்.

150 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட குருநகர் அகதிகள் நேற்று இந்திய நிவாரணப் பொருள்களைப் பெற்றனர். (உ–ள)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 29-06-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Monday June 29, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87

## திருப்பி--------

(1ஆம் பக்க தொடர்ச்சி)
வெளியிட்டிருக்கிறுர்.

ஸ்ரீ வத்ஸவ கப்பலே ஸ்ரீலங்கா கடல் எல்லைக்குள் முதலில் பிரவேசித்தது.

இதனை ஸ்ரீலங்கா கடற்படைக்குரிய சீன பீரங்கிப் படகு 'ரனகாமி' முதலில் அறிவித்தது.

காங்கேசன்துறை ஹாபர்வியூ ராணுவ முகாமில் தகவலை எதிர்பார்த்து இருந்த கப்டன் மோஹன் சமரசேகரா செய்தியைப் பெற்றுக் கொண்டார்.

முதலில் 'ஸ்ரீவத்ஸவ' கப்டனுடன் கப்டன் மோஹன் சமரசேகரா தொடர்பு கொண்டு வரவேற்ருர்.

அதன் பின்னர் இந்தியத் தூதரக பாதுகாப்பு அதிகாரி கப்டன் சி. பி. குப்தாவிடம் தொடர்பு சாதனம் கையளிக்கப்பட்டது.

கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையே ஏற்பட்ட வழிமுறை உடன்பாட்டில் செய்தியாளர்கள் கரை இறங்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்ற நிபந்தனை இருந்தது.

இருந்தும் கொழும்பில் இருந்து பறந்து வந்த கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்க இந்திய செய்தியாளர்களை ஆச்சரியத்துக்காளாக்கினுர்.

முகாமிற்கு அவர்களைக் கூட்டி வருமாறு காங்கேசன்துறை முகாம் தளபதி விபுல் பொத்தேஜுக்கு அவர் உத்தரவிட்டார்.

9 செய்தியாளர்களும் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தேநீர் விருந்துபசாரமளித்துக் கௌரவிக்கப்பட்டனர்.

வந்திருந்த புகைப்படப்பிடிப்பாளர்கள் பொருள்கள் இறக்கப்படுவதை படம் பிடிக்கவில்லை. பாதுகாப்பு முகாமையும் அதன் சுற்றுப் பிரதேசத்தையும் படம் பிடிப்பதிலே அவர்கள் நாட்டம் காட்டினர்.

இப்படி 'வீக்கென்ட்' பத்திரிகையில் இக்பால் அத்தாஸ் எழுதியிருக்கிறுர். (உ–எ)

## கிழக்குத் - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கான மக்கள் தஞ்சம் அடைந்துள்ளார்கள்.

கிழக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்வதன் காரணமாக பொதுமக்கள் வெளியே செல்லமுடியாத நிலையில் பட்டினியால் வாடுகிறுர்கள்.

இந் நிலையில் யாழ் மக்களுக்கு மட்டும் இந்தியா நிவாரணப் பொருள்கள் வழங்குவதோடு நிற்கக் கூடாது.

இந்திய அரசாங்கம் ஒரு கப்பலையாவது திருகோணமலை துறைமுகத்திற்கு அனுப்பி அங்குள்ள தமிழ் மக்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டும். —இப்படி அவை வேண்டுகோள் விடுத்துள்ளன.

இதேவேளை ஈரோஸ் இயக்கத்தினர் சென்னையில் விடுத்த அறிக்கை ஒன்றில்—

இந்தியாவின் இரண்டாவது உணவுக் கப்பல் 'பருக்கா'வை திருமலை துறைமுகத்துக்கு அனுப்புமாறும்—

திருமலையிலும், மூதூரிலும் முகாம்களில் உள்ள சுமார் 40 ஆயிரம் அகதிகளுக்கு இந்திய உதவியை வழங்குமாறும் இந்திய அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. (உ–10)

## தமிழர்---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
லங்கள், கஷ்டங்கள் தொடர்ந்து நடைபெருது என்றே நம்புகின்றேன் — என்று கப்டன் குப்தா கூறினுர்.

''அப்படியானுல் இந்தியா காத்திரமான நடவடிக்கை எதையும் மேற்கொள்ளுமா?'' என எமது செய்தியாளர் வினவினுர்.

அதற்குப் பதிலளித்த சப்டன் குப்தா—

இந்நிலை மேலும் தொடராமல் இருக்க இந்தியா காத்திரமான நடவடிக்கைகளை நிச்சயம் மேற்கொள்ளும். அந்த நடவடிக்கைகள் இருநாடுகளுக்கும். இடையிலான உறவுகளையும் ஒற்றுமையையும் சிதைப்பதாக இருக்கமாட்டா— என்று கூறினுர். (அ–ள)

## நீத்தார் பட்டியல்

### முத்துவேலு தம்பையா

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த முத்துவேலு தம்பையா அவர்கள் நேற்றுக் காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற முத்துவேலின் அருமை மகனும், காலஞ்சென்ற அரியபுத்திரர், சதாசிவம், குமாரவேலு, நாகம்மா, கற்பகம், வள்ளியம்மை, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், தங்கரத்தினம், காலஞ்சென்ற சிவரட்ணம், [ஹோம் நீட்ஸ் உரிமையாளர்] மகாலிங்கம், தனபாலசிங்கம், சிவயோகம், சண்முகலிங்கம், இராமச்சந்திரன் [ஹோம் நீட்ஸ். யாழ் ] ஆகியோரின் சிறிய தந்தையாரும், காலஞ்சென்ற தம்பிராஜா (வர்த்தகர், பதுளை), முத்துலிங்கம் (விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி) ஆகியோரின் சிறியமாமனுரும் ஆவார்.

அன்னுரின் பூதவுடல் 17/1, பிறவுண் வீதி இல்லத்திலிருந்து ஈமைக்கிரியைக்காக இன்று திங்கட்கிழமை நண்பகல் 2-00 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்ருர், உறவினர், நண்பர்கள் மற்றும் யாவருக்கும் அறியத்தருகிறேும்.

— தகவல்: S. இராமச்சந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org